16.03.2026

<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )</u>

<u>விழுப்புரம்</u>

<u>அமர்வு வழக்கு எண். 21/2026</u>

அ.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாலகிருஷ்ணன் | | |
| த/பெ | பங்காருராஜ் | | |
| கிராமம் | பந்தநல்லூர் | தொழில் | உதவி ஆய்வாளர் |
| தாலுக்கா | திருவிடைமருதூர் | வயது | 59 /2026 |
| மாவட்டம் | தஞ்சாவூர் | தேதி | 04.02.2026. |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிராமணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22/02/2018-ம் தேதி சிறப்பு உதவி ஆய்வாளராக விழுப்புரம் மாவட்டம், வளவனூர் காவல் நிலையத்தில் பணியில் இருந்த போது, காவல் உதவி ஆய்வாளரின் உத்தரவின்படி நானும், தலைமை காவலர் 296 தேவநாதன் என்பவரும், மணல் கடத்தல் சம்பந்தமாக விழுப்புரம் மாவட்டம், சி.கள்ளிப்பட்டு தென்பெண்ணை ஆற்றில், கண்காணித்துக் கொண்டிருந்தபோது, ஆற்றின் அருகில் பின்னால் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த

சரவணன் த/பெ.கலியபெருமாள், அரசமங்கலம் என்பவர் பொக்லைன் இயந்திரம் TN 58 AE 5663 என்ற பொக்லைன் வாகனத்தை வைத்து ஆற்றில் மணலை எடுத்து ஓரமாக சேகரித்து கொண்டிருந்தார். நாங்கள் இருவரும் சென்று இந்த மணல் எடுப்பதற்கு அரசு அனுமதி இருக்கிறதா? என்று கேட்டபோது ஆத்திரம் கொண்டு நாங்கள் மணல் விற்போம், நீ போலீஸ் என்ன பெரிய ஆளா? என் அசிங்கமாக திட்டி, கிட்டே வந்தால் பொக்லைன் இயந்திரத்தை இயக்கி கொலை செய்து விடுவதாக மிரட்டினார். நாங்கள் சுதாரித்துக் கொண்டதால் தப்பித்துக் கொண்டோம். பின்பு பார்ட்டி சகிதம் அவரை மடக்கி பிடித்து, பொக்லைன் இயந்திரத்தையும் அவரையும் காவல் நிலையம் கொண்டு வந்து தனி அறிக்கையாக உதவி ஆய்வாளர் வசம் ஒப்படைத்தோம். என்னிடம் காட்டப்படுவது தான் அந்த தனி அறிக்கை ஆகும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த தனி அறிக்கை அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு உதவி ஆய்வாளர் செந்தில்குமார் என்பவர் காரணம் கூறி எதிரியை கைது செய்தும், பொக்லைன் இயந்திரத்தை கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினார். அதில் நானும், தேவநாதனும் கையொப்பம் செய்தோம். அந்த மகசரில் உள்ள 1ம் கையெழுத்து என்னுடையது ஆகும். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் உதவி ஆய்வாளர் அவர்கள் வளவனூர் காவல் நிலைய குற்ற எண்.183/18 -யை 294 (b), 379, 430, 307 இ.த.ச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். அந்த பொக்லைன் இயந்திரத்தை பார்த்தால் என்னால் அடையாளம் காண்பிக்க முடியும். என்னிடம் காண்பிக்கப்படும் 4 புகைப்படங்களில் உள்ள பொக்லைன் இயந்திரம் தான் அது ஆகும். அந்த பொக்லைன் இயந்திரத்தின் (பதிவு எண்) TN 58 AE 5663 ஆகும். அந்த பொக்லைன் இயந்திரத்தின் 4 புகைப்படங்கள் சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரியைப் பார்த்தால் என்னால் அடையாளம் காண்பிக்க முடியும். சாட்சி ஆஜர் எதிரியை சரியாக அடையாளம் காண்பித்தார். இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னையும், தேவ நாதனையும் விசாரணை செய்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

நான் தற்போது நீதிமன்ற விசாரணையில் சொன்னதைத்தான் எனது வாக்குமூலத்திலும், தனி அறிக்கையிலும், காவல்துறையினர் என்னை விசாரணை செய்த போதும் சொன்னேனா? என்றால் ஆமாம். தனி அறிக்கையை நான் தயார் செய்தேனா? தேவநாதன் தயார் செய்தாரா? என்றால், நான்தான் தயார் செய்தேன். சம்பவ இடத்திற்கு நான் செல்வது வழக்கமான ரோந்தா ? அல்லது குறிப்பிட்ட நோக்கத்திற்காக நடந்த ரோந்தா ? என்றால் குறிப்பிட்ட நோக்கத்திற்காக தான் சென்றோம். நாங்கள் ரோந்து போனது எந்த பீட் என்று தெரியுமா? என்றால் தெரியாது. நான் சம்பவ இடத்திற்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால், 07.45 மணிக்கு சென்றேன். நான் சம்பவ இடத்திற்கு சென்றதற்கான குறிப்பை ஜெனரல் டைரியில் பதிவு செய்துள்ளேன் என்றால் ஆமாம். நான் சம்பவ இடத்திற்கு எந்த வாகனத்தில் சென்றேன் என்பதை எனது தனி அறிக்கையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடமான தென்பெண்ணையாறு கடலூர் மாவட்டத்திற்கு சொந்தமானது என்றால், இல்லை விழுப்புரம் மாவட்ட எல்லையில் அமைந்துள்ளது. அந்த மணலை அள்ளி லாரியில் போட்டார்களா? அல்லது வேறு வாகனத்தில் போட்டார்களா? என்றால், தரையில் போட்டார்கள். எந்த திசையில் இருந்த தரையில் போட்டார்கள் என்று குறிப்பிட்டு காவல்துறை விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். தரையில் எந்த காரணத்திற்காக எதிரிகள் மணலை குவித்து வைத்திருந்தார்கள் என்பதை நான் எனது விசாரணையில் கண்டறியவில்லை. தரையில் எந்த விதமான மணலையும் குவிக்கவில்லை என்றும், அதனால் தான் நான் வாக்குமூலத்தில் அதை சொல்லவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் எத்தனை மணிக்கு எதிரியை கைது செய்தோம் என்றால், 08.30 மணிக்கு கைது செய்தோம். நானும், உதவி ஆய்வாளர் செந்தில்குமாரும் கைது செய்தோம். பார்வை மகசர் எத்தனை மணிக்கு தயார் செய்தோம் என்றால், தன்னிச்சையாக வழக்கு பதிவு செய்ததால் பார்வை மகசர் தயார் செய்யவில்லை. கைப்பற்றுதல் மகசர் 08-45 மணிக்கு தயார் செய்தோம். நான் தனி அறிக்கை காவல்

நிலையத்தில் 09.00 மணிக்கு கொடுத்து வழக்கு பதிவு செய்தார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் வழக்கு பதிவு செய்யாமலேயே எதிரியை கைது செய்துள்ளோம் என்றால், சரிதான். கொலை செய்ய முயற்சி என்பது எந்த விதமான முயற்சி என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவத்தின் போது எனக்கோ, என்னுடன் வந்தவர்களுக்கோ, காயம் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான். நாங்கள் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றால் சரிதான். நாங்கள் யாரை விசாரித்து விவரம் தெரிந்து கொண்டோம் என்றால், யாரையும் விசாரிக்கவில்லை. எப்படி தெரிந்து கொண்டோம் என்ற விவரத்தை குறிப்பிட்டு சொல்ல வில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு உதவி ஆய்வாளரை எத்தனை மணிக்கு காவல் நிலையத்தில் இருந்து கூப்பிட்டுச் சென்றேன் என்றால் நான் கூப்பிட்டு செல்லவில்லை. நான் கிராம நிர்வாக அலுவலரிடம் தகவல் ஏதாவது கேட்டு தெரிந்து கொண்டேனா? என்றால் இல்லை. நான் தனி அறிக்கையில் சொல்லியுள்ளது போல கடந்த 22/02/2018 அன்று எந்தவிதமான சம்பவமும் நடைபெறவில்லை என்றும், நான் சம்பவ இடத்திற்கு போகவில்லை என்றும், எதிரி எந்தவிதமான சட்டவிரோதமான நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை என்றும், என்னையும், என்னுடன் சென்றவர்களை கொலை செய்ய முயற்சி செய்யவில்லை என்றும், புள்ளிவிவர கணக்குக்காக காவல் நிலையத்தில் வைத்து பொய்யான வழக்கை தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>

<u>இல்லை</u>